சீரான இயக்கத்திலுள்ள பாய்பொருளில் அதன் இயக்கத்திற்கு செங்குத்து திசையில் A, B என்ற இரு பரப்புகளை எடுத்துக் கொள்வோம். படத்தில் இவற்றின் எல்லையில் சீரோட்ட வரிகள் வரையலாம். இவை ஒரு குழாய் போல் அமைகிறது. இதனை ஓட்டக் குழாய் என்பர். ஓட்டக் குழாயின் பக்கங்கள் எல்லாம் ஓட்ட திசையாக இருப்பதால், பாய் பொருள்கள் வெளியிலிருந்து உட்புகவோ அல்லது உள்ளிருந்து வெளிவரவோ இயலாது. ஒரு புறம் நுழையும் பாய்பொருள் குழாயின் மறுபுறம் வழியாக தான் வெளிவர முடியும். பக்கவாட்டில் வெளிவர முடியாது.

தொடர்ச்சி சமன்பாடு :

பாய் பொருள்களின் அடிப்படைச் சமன்பாடு தொடர்ச்சி சமன்பாடாகும். இறுகாத் தன்மையுள்ள பாய் பொருள் கட்கு தொடர்ச்சி சமன்பாடு கீழ்க்கண்டவாறு வருவிக்கலாம்.



AB என்ற ஓட்டக் குழாயின் வழியாக பாய் பொருள் செல்வதாக கொள்வோம். படத்தில் A, B யில் இருக்கு

வெட்டு பரப்பு a_1, a_2 எனக் கொள்வோம்.

ஒவ்வொரு புள்ளியிலும் சீரோட்ட வரிகள் குழாயின் அச்சுக்கு இணையாகவும் குறுக்கு வெட்டு பரப்பிற்கு செங்குத்தாகவும் இருப்பினும், எல்லா பகுதிகளிலும் ஓட்ட திசைவேகம் சமமாக இருக்க வேண்டிய தேவையில்லை. A, B ல் முறையே திசைவேகம் v_1, v_2 எனக் கொள்வோம்.

இக்குழாயின் ஒரு சிறிய இழையை கருதுவோம். A, B ல் இதன் குறுக்கு வெட்டு பரப்புகள் da_1, da_2 எனக் கொள்வோம். δt நேரத்தில் குழாயின் ஆரம்ப முனையில் கடக்கும் தூரம் ds_1 எனவும், முடிவு முனையில் ds_2 எனவும் கொள்வோம். A, B ஆகிய பகுதிகளில் பாய் பொருளின் அடர்த்தி முறையே ρ_1, ρ_2 எனக் கொள்வோம்.

A பகுதியில் ஓரலகு நேரத்தில் குழாயினுள் நுழையும் திரவத்தின் நிறை $= \dfrac{da_1\, ds_1\, \rho_1}{\delta t}$

$$= da_1 v_1 \rho_1 \qquad \therefore \frac{ds_1}{\delta t} = v_1$$

B ல் பகுதியில் ஓரலகு நேரத்தில் வெளியேறும் திரவத்தின் நிறை $= \dfrac{da_2\, ds_2\, \rho_2}{\delta t}$

$$= da_2 v_2 \rho_2$$

குழாயினுள் A-ல் ஓரலகு நேரத்தில் நுழைகின்ற திரவத்தின் நிறை A-ல் பாய்பொருள்.

ஓட்ட நிறை வீதம் $= \int_0^{a_1} da_1 v_1 \rho_1$

B ல் ஓரலகு நேரத்தில் வெளியேறும் பாய் பொருளின் நிறை B ல் பாய் பொருள் ஓட்ட நிறை வீதம்

$$= \int_0^{a_2} da_2 v_2 \rho_2$$

$$= a_2 v_2 \rho_2$$

பாய் பொருள் இறுகா தன்மை கொண்டமையால் $\rho_1 = \rho_2 = \rho$. குழாயின் பக்கம் வழியாக பாய்பொருள் உட்புகவோ வெளிவரவோ முடியாது. ஆகவே குழாயினுள் பாய்பொருளை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது.

∴ A-ல் ஓரலகு நேரத்தில் நுழையும் பாய்மபொருளின் நிறை B-ல் ஓரலகு நேரத்தில் வெளியேறும் பாய்ம பொருளின் நிறை.

or) $a_1 v_1 \rho = a_2 v_2 \rho$

or) $a_1 v_1 = a_2 v_2$

av ஒரு மாறிலி.

இதனை தொடர்ச்சி சமன்பாடு என்பர். av என்பது ஓரலகு நேரத்தில் ஏதாவது ஒரு குறுக்கு வெட்டு பகுதி வழியாகச் செல்லும் பாய்ம பொருளின் பருமனாகும். ஆகவே இதனை பரும ஓட்ட வீதம் அல்லது இறக்க வீதம் என்பர்.

பெர்னோலி தேற்றம் :

பெர்னோலி தேற்றத்தை கீழ்க்கண்டவாறு கூறலாம். சீரான இயக்கத்திலுள்ள இறுகா தன்மையும், பாகியிலற்ற தன்மையும் கொண்ட பாய்மபொருளின் மொத்த ஆற்றல், இயக்கம் முழுவதும் மாறிலியாக அமையும். அதாவது,

நிலைமாற்றல் + இயக்க ஆற்றல் + அழுத்த ஆற்றல் = ஒரு மாறிலி

இதனை பெர்னோலி தேற்றம் என்பர்.

வரி சீரியக்கம் கொண்டுள்ள பாய்ம பொருளைக் கருதுவோம். மாறுபட்ட குறுக்கு வெட்டு பரப்பு கொண்ட ஓட்ட குழாயை கருதுவோம். A, B என்பது குழாயின் செங்குத்து குறுக்கு வெட்டு பரப்பு இவற்றின் குறுக்கு வெட்டு பரப்பளவு முறையே a_1, a_2 எனக் கொள்வோம். A, B ல் திசை வேகங்கள் முறையே v_1, v_2 எனவும், அழுத்தங்கள் P_1, P_2 எனவும் கொள்வோம். படத்தில் $a_1 > a_2$ ஆகவே பாய்மபொருளின் தொடர்ச்சி தத்துவப்படி $v_1 < v_2$.



பாய் பொருள் இறுகாத் தன்மை கொண்டதாக இருப்பின். A-ல் நுழைகின்ற திரவத்தின் பருமனும் B-ல் வெளியேறுகின்ற பருமனும் சமமாக இருக்கும்.

பாய்மபொருள் A-யிலிருந்து B-க்கு கடக்கும் போது செய்யப்பட்ட வேலை

$= P_2 v - P_1 v$

$= v(P_2 - P_1).$

xy என்ற கிடைத்தள கோட்டிலிருந்து, திரவக் குழாய் பகுதி A, B ன் மையங்கள் முறையே h_1, h_2 உயரத்தில் இருப்பதாக கொள்வோம்.

பருமன் v கொண்ட பாய்மப் பொருளானது A-யிலிருந்து B-க்கு அடையும் போது, அதன் நிலையாற்றல் இழப்பு

$= mg(h_1 - h_2)$ ($m \rightarrow$ நிறை)

இயக்க ஆற்றல் இழப்பு $= \frac{1}{2} m (v_1^2 - v_2^2)$

செய்யப்பட்ட வேலை $=$ P.E இழப்பு $+$ K.E இழப்பு.

$$v(P_2 - P_1 = mg(h_1 - h_2) + \frac{1}{2} m (v_1^2 - v_2^2)$$

திரவத்தின் அடர்த்தி ρ எனில்

$$V = \frac{m}{\rho}$$

$$\frac{m}{\rho}(P_2 - P_1) = mg(h_1 - h_2) + \frac{1}{2} m (v_1^2 - v_2^2)$$

$$\frac{P_2}{\rho} - \frac{P_1}{\rho} = gh_1 - gh_2 + \frac{1}{2} v_1^2 - \frac{1}{2} v_2^2 \quad (or)$$

$$\frac{P_2}{\rho} + gh_2 + \frac{1}{2} v_2^2 = \frac{P_1}{\rho} + gh_1 + \frac{1}{2} v_1^2$$

$\frac{P}{\rho} + gh + \frac{1}{2} v^2$ ஒரு மாறிலியாகும்.

மேற்கண்ட சமன்பாட்டை g-ல் வகுக்க.

$\frac{P}{g\rho} + h + \frac{V_2}{2g} =$ ஒரு மாறிலி.

$P/g\rho$ ஐ அழுத்த முகடு எனவும், $v^2/2g$ ஐ திசைவேக முகடு எனவும், h ஐ ஈர்ப்பியல் முகடு எனவும் அழைப்பர்.

ஆகவே பெர்னௌலி தேற்றத்தை கீழ்க்கண்டவாறும் கூறலாம்.

உராய்வற்ற, அமுக்க தன்மையற்ற திரவம் வரி சீரோட்டத்தில் இருக்கும் போது அதில் உள்ள புள்ளிகளில் அழுத்த முகடு, திசைவேக முகடு, ஈர்ப்பியல் முகடு ஆகியவற்றின் கூட்டுத்தொகை ஒரு மாறிலியாகும்.

திரவமானது கிடைத்தள குழாயில் செல்லும் போது, எ.கீழ்ப்படல்
ஆகவே h ஒரு மாறிலி

$\frac{v^2}{2g} + \frac{P}{g\rho}$ ஒரு மாறிலி. (or)

$\frac{v^2}{2} + \frac{P}{\rho}$ ஒரு மாறிலி

அப்போது. $\frac{v_1^2}{2} + \frac{P_1}{\rho} = \frac{v_2^2}{2} + \frac{P_2}{\rho}$

இதிலிருந்து திசைவேகம் அதிகமாகும் போது அழுத்தம் குறைகிறது. என்பதும், திசைவேகம் குறையும் போது அழுத்தம் அதிகமாகிறது என்பது தெரிகிறது.

டோரிசெல்லி - தேற்றம் :

தொட்டி ஒன்றில் திரவம் இருப்பதாகக் கொள்வோம் தொட்டியின் பக்கவாட்டில் அமைந்துள்ள வெளித்திறப்பு 'O' லிருந்து திரவத்தின் மேற்பரப்பு 'h' உயரத்தில் இருப்பதாக கொள்வோம். படத்தில் இத்திறப்பு வழியாக திரவம் v என்ற திசைவேகத்தில் வெளியேறுகிறது. இதன் திசைவேகத்தை புறவோட்டத் திசைவேகம் என்பர்.

தொட்டியின் பரிமாணம் மிக அதிகமாக இருக்கும் போது மேற்பரப்பில் உள்ள திரவத்தின் திசைவேகம் சுழி எனவும், இப்பரப்பிலும் O- விலும் உள்ள அழுத்தம் வளியழுத்தம் எனவும் கொள்ளலாம். வளியழுத்தம் திரவ ஓட்டத்தில் பங்கு கொள்வதில்லை. திரவ ஓட்டம் நிலை அழுத்தத்தால் ஏற்படுகிறது. ஓட்டக் குழாய் திரவ மேற்பரப்பில் ஆரம்பித்து வெளி திறப்பு O- வில் முடிகிறது.
பெர்னௌலி தேற்றப்படி,



மேற்பரப்பில் ஓரலகு நிறையின் மொத்த ஆற்றல். $= K.E + P.E +$ அழுத்த ஆற்றல்

$= 0 + gh + 0$

$= gh$

வெளி திறப்பில் ஓரலகு நிறையின் மொத்த ஆற்றல்

$= \frac{1}{2} v^2 + 0 + 0$

$= \frac{1}{2} v^2$

பெர்னோலி தேற்றப்படி சீரான ஓட்டத்தின் திரவத்தின் மொத்த மாறிலியாகும்.

$$\frac{1}{2}v^2 = gh$$

$$v^2 = 2gh$$

$$v = \sqrt{2gh}$$

புறவொத்த

புறவொழுக்க திசைவேகம் $v = \sqrt{2gh}$

டோரிசெல்லி இத் திசைவேகமானது, திரவம் தடையின்றி h உயரத்திலிருந்து விழும் போது அடைகின்ற திசைவேகத்திற்கு சமமாகும் என கூறினார்.

திரவம் அடைந்த திசைவேகம் v எனின் $v^2 - u^2 = 2as$ எனும் சமன்பாட்டிலிருந்து

$$v^2 - 0 = 2gh \quad \text{(or)}$$

$$v^2 = 2gh$$

$$v = \sqrt{2gh}$$

இதனை டோரிசெல்லியின் தேற்றம் அல்லது புறவொழுக்கு விதி என்பர். இதனைக் கீழ்க்கண்டவாறு கூறலாம்.

வெளித் திறப்பு ஒன்றின் வழியாக வெளியேறும் திரவத்தின் புறவொழுக்குத் திசைவேகமானது, திரவ மேற்பரப்பிற்கும், வெளித் திறப்பிற்கும் இடையே உள்ள செங்குத்துயரம் வழியாக விழும் போது அடைகின்ற, திசைவேகத்திற்கு சமமாகும்.

உள்ளுராய்வும், பாகியலும் இல்லாத திரவம் கிடையாது. ஆகவே நடைமுறையில் இலட்சிய திசைவேகம் $v = \sqrt{2gh}$ ஆக இருக்க முடியாது. சோதனை மூலம் கணக்கிடும் திசைவேகம் 'v' ஐ விடக் குறைவாக இருக்கும். இதன் மதிப்பு $C_v \sqrt{2gh}$ ஆகும். இங்கு C_v ஐ திசைவேக எண் என்பர். இதன் மதிப்பு 0.95 லிருந்து 0.99 வரை அமையும். பொதுவாக இதனை 0.97 எனக் கொள்வோம்.

உண்மையான புறவொழுக்கு திசைவேகம் $v = 0.97\sqrt{gh}$.

பெர்னோலி சமன்பாட்டின் சில பயன்கள்:

1. வெஞ்சுரி மீட்டர்

பாய் பொருட்களின் வேகத்தை அளவிட வெஞ்சுரி மீட்டர் பயன்படுத்தப்படுகிறது. இதனை நீரின் வேகத்தை அளவிட பயன்படுத்தும் போது நீர் வெஞ்சுரி மீட்டர் என்பர். திசைவேகம் சிறுமமாக இருக்கும் போது அழுத்தம் பெருமமாகவும், திசைவேகம் பெருமமாக இருக்கும் போது அழுத்தம் சிறுமமாகவும் இருக்கும் என்ற பெர்னோலி தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது வெஞ்சுரி மீட்டர்.



வெஞ்சுரி மீட்டர் அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதில் மூன்று பகுதிகள் உள்ளன.

1. குவிக்கும் குழாய் AB. இதன் விட்டம் A-ல் d_1 எனவும், B-ல் d_2 எனவும் கொள்வோம். இவ்விட்டமானது A யிலிருந்து வேகமாக குறைகிறது.

2. குறுகிய கிடைத்தள பகுதி BC. இதன் விட்டம் D_2 சீரானதாகும். இதனை தொண்டை என்பர்.

3. விரி குழாய் CD. இதனை விரவிப்பான் என்பர். C ல் இதன் உள்விட்டம் d_1, D ல் இதன் வெளிவிட்டம் d_1. இங்கு விட்டமானது மெதுவாக அதிகரிக்கிறது. ஆகவே A-ல் உள்விட்டமும், D ல் வெளிவிட்டமும் சமமாகும்.

தொண்டை பகுதியில் உள்ள விட்டத்திற்கும், வெளி விட்டத்திற்கும் இடையே உள்ள விகிதம் d_2/d_2 தொண்டை விகிதம் என்பர். இதன் மதிப்பு 1/4 இருந்து 1/3 வரை அமையும்.

குவிக்கும் கூம்பு AB நீரோட்ட குறுக்கு வெட்டு பரப்பினைக் குறைத்து, திசைவேகத்தை அதிகரித்து, தொண்டை பகுதியில் அழுத்தத்தை குறைக்கிறது. இவ்வாறு கூம்பின் அகவாய் முனைக்கும் தொண்டைக்கும் இடையே நல்ல அழுத்த வேறுபாடு தோன்றுகிறது. நீரோட்ட குறுக்கு வெட்டு பரப்பை அதிகரித்து அதன் திசை வேகத்தையும், அழுத்தத்தையும் பழைய நிலைக்கு கொண்டு வருகிறது.

இவ்வாறு நீரானது தொண்டை பகுதியை அடையும் போது சுருக்கமடைகிறது. தொண்டை பகுதியிலிருந்து வெளியேறும் போது எதிர் சுருக்கம் அடைகிறது. எதிர் சுருக்கம் மெதுவாக நடைபெற வேண்டும். இதற்காகவே, விரி கூம்பின் சரிவு மெதுவாக அதிகரிக்கப்படுகிறது.

வெஞ்சுரி மீட்டரை பயன்படுத்தும் போது கீழ்க்கண்டவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. அழுத்த வேறுபாடு குவிக்கும் கூம்பின் அகவாய் A க்கும் தொண்டை பகுதிக்குமிடையே தான் அளவிட வேண்டும். தவிர விரி கூம்பின் வெளிவாய்க்கும், தொண்டை பகுதிக்குமிடையே அளவிடக் கூடாது.

2. வெஞ்சுரி மீட்டரில் திரவம் முழுமையாக ஓட வேண்டும். எந்த இடை வெளியும் இருக்க கூடாது. காற்றிருந்தால் நீரின் ஓட்ட தொடர்ச்சி பாதிக்கும்.

உள்வாய் A க்கும் தொண்டை பகுதிக்கும் இடையே அழுத்த வேறுபாடு அளவிட A யிலும் தொண்டை பகுதியிலும் ஆகிய செங்குத்து குழாய் பொருத்தப்பட்டுள்ளது.

Unit- III: Dynamics and Friction

Moment of Inertia and radius of gyration (Definition only) – Parallel axes theorem and perpendicular axes theorem – Kinetic energy of a body rotating about an axes through its center of mass – compound pendulum –Bifilar pendulum (Parallel threads)

Forces of friction – Laws of friction – angle of friction, Resultant reaction and cone of friction- Equilibrium of a body on a rough inclined plane (with and without force) to the horizontal – Friction clutch.

Moment of inertia

Moment of inertia is defined as the quantity expressed by the body resisting angular acceleration which is the sum of the product of the mass of every particle with its square of a distance from the axis of rotation. ... Moment of Inertia is also known as the angular mass or rotational inertia. $I = \frac{L}{\omega}$

I=inertia

L=angular momentum

ω=angular velocity

Radius of Gyration

The moment of inertia of a body about an axis is sometimes represented using the radius of gyration. Now, what do you mean by the radius of gyration? We can define the radius of gyration as the imaginary distance from the centroid at which the area of cross-section is imagined to be focused at a point in order to obtain the same moment of inertia. It is denoted by *k*.

Radius of Gyration Formula

The formula of moment inertia in terms of the radius of gyration is given as follows:

$I = mk^2$ (1)

where I is the moment of inertia and m is the mass of the body

Accordingly, the radius of gyration is given as follows

k= √ Im (2)

The unit of the radius of gyration is mm. By knowing the radius of gyration, one can find the moment of inertia of any complex body equation (1) without any hassle.

Consider a body having *n* number of particles each having a mass of *m*. Let the perpendicular distance from the axis of rotation be given by $r_1, r_2, r_3, \ldots, r_n$. We know that the moment of inertia in terms of radius of gyration is given by the equation (1). Substituting the values in the equation, we get the moment of inertia of the body as follows

$$I = m_1 r_1^2 + m_2 r_2^2 + m_3 r_3^2 + \ldots + m_n r_n^2 \quad \ldots\ldots\ldots\ldots (3)$$

If all the particles have the same mass then equation (3) becomes

$$I = m\,(r_1^2 + r_2^2 + r_3^2 + \ldots + r_n^2)$$
$$= \frac{mn\,(r_1^2 + r_2^2 + r_3^2 + \ldots + r_n^2)}{n}$$

We can write mn as M which signifies the total mass of the body. Now the equation becomes

$$I = M\,\frac{(r_1^2 + r_2^2 + r_3^2 + \ldots + r_n^2)}{n}$$

………… (4)

From equation (4), we get

$$MK^2 = M\left(\frac{r_1^2 + r_2^2 + r_3^2 + \ldots + r_n^2}{n}\right)$$
$$\text{or, } K = \sqrt{\frac{r_1^2 + r_2^2 + r_3^2 + \ldots + r_n^2}{n}}$$

From the above equation, we can infer that the radius of gyration can also be defined as the root-mean-square distance of various particles of the body from the axis of rotation.

Parallel axis theorem

The moment of inertia of a body about an axis parallel to the body passing through its center is equal to the sum of moment of inertia of body about the axis passing through the center and product of mass of the body times the square of distance between the two axes.

Parallel axis theorem statement can be expressed as follows:

$I = Ic + Mh^2$

Where,

I is the moment of inertia of the body

Ic is the moment of inertia about the center

M is the mass of the body

h^2 is the square of the distance between the two axes

Parallel Axis Theorem Derivation

Let Ic be the moment of inertia of an axis which is passing through the center of mass (AB from the figure) and I be the moment of inertia about the axis A'B' at a distance of h.

Consider a particle of mass m at a distance r from the center of gravity of the body. Then,
Distance from A'B' = r + h

$I = \sum m\,(r + h)^2$

$I = \sum m\,(r^2 + h^2 + 2rh)$

$I = \sum mr^2 + \sum mh^2 + \sum 2rh$

$I = Ic + h2\sum m + 2h\sum mr$

$I = Ic + Mh^2 + 0$

$I = Ic + Mh^2$

Hence, the above is the formula of parallel axis theorem.

Perpendicular Axis Theorem

For any plane body the moment of inertia about any of its axes which are perpendicular to the plane is equal to the sum of the moment of inertia about any two perpendicular axes in the plane of the body which intersect the first axis in the plane.

Perpendicular axis theorem is used when the body is symmetric in shape about two out of the three axes if the moment of inertia about two of the axes are known the moment of inertia about the third axis can be found using the expression:

$I_a=I_b+I_c$



Say in an engineering application we have to find the moment of inertia of a body, but the body is irregularly shaped, and the moment of in these cases we can make use of the parallel axis theorem to get the moment of inertia at any point as long as we know the center of gravity of the body, this is a very useful theorem in space physics where the calculation of moment of inertia of space-crafts and satellites, making possible for us to reach the outer planets and even the deep space. The theorem of perpendicular axis helps in applications where we don't have access to one axis of a body and it is vital for us to calculate the moment of inertia of the body in that axis.

Kinetic energy of a body rotating about an axes through its center

A rotating object also has kinetic energy. When an object is rotating about its center of mass, its rotational kinetic energy is $K = ½I\omega^2$. Rotational kinetic energy = ½ moment of inertia * (angular speed)^2. When the angular velocity of a spinning wheel doubles, its kinetic energy increases by a factor of four.

Energy in rotational motion is not a new form of energy; rather, it is the energy associated with rotational motion, the same as kinetic energy in translational motion. However, because kinetic energy is given by $K=1/2mv^2$, and velocity is a quantity that is different for every point on a rotating body about an axis, it makes sense to find a way to write kinetic energy in terms of the variable ωω, which is the same for all points on a rigid rotating body. For a single particle rotating around a fixed axis, this is straightforward to calculate. We can relate the angular velocity to the magnitude of the translational velocity using the relation $v_t = \omega r$, where r is the distance of the particle from the axis of rotation and v_t is its tangential speed. Substituting into the equation for kinetic energy, we find

$K=1/2mv^2_t=1/2\ m(\omega r)^2=1/2(mr^2)\omega^2$.

In the case of a rigid rotating body, we can divide up any body into a large number of smaller masses, each with a mass mj and distance to the axis of rotation rj, such that the total mass of the body is equal to the sum of the individual masses: $M=\sum jmj$. Each smaller mass has tangential speed vjvj, where we have dropped the subscript *t* for the moment. The total kinetic energy of the rigid rotating body is

$K=\sum j1/2mjvj^2=\sum j1/2mj(rj\omega j)^2$

and since $\omega j=\omega\omega j=\omega$ for all masses,

$K=1/2(\sum jmjr^2j)\omega^2$.

Compound Pendulum

In this experiment we shall see how the period of oscillation of a compound, or physical, pendulum depends on the distance between the point of suspension and the center of mass. The compound pendulum you will use in this experiment is a one metre long bar of steel which may be supported at different points along its length, as shown in Fig. 1.



If we denote the distance between the point of suspension, O, and the center of mass, by *l* , the period of this pendulum is:

$T = 2\pi(\frac{k^2+l^2}{gl})^{1/2}$

where k is the radius of gyration of the bar about an axis passing through the centre of mass.

You should derive this expression.

The period of a simple pendulum of length l' is:

T = 2p(*l* ¢□ g)$^{1/2}$

By equating Eqs (1) and (2) and solving for *l* , we may find the values of *l* such that the compound

pendulum has the same period as that of a a simple pendulum of length l':

l =*l* ¢ ± (*l* ¢^{2} - 4*k*^{2})$^{1/2}$/2)

As you can see, there are two values of *l* , which we will label *l* 1 and *l* 2, for which the period of

the compound pendulum is the same as that of the given simple pendulum.

There is a value of *l* for which the compound pendulum has a minimum period. The minimum

period may be found from Eq. (1) by setting:

dT/dl= 0

One finds:

*T*min = 2p (2*k/g)*$^{1/2}$

Bifilar Pendulum

The bifilar suspension is used to determine the moment of inertia of a body about an axis passing through its centre of gravity. The body is suspended by two parallel cords of length "l", at a distance "d" apart. If the mass of the body is "M", then the tension in either cord is Mg/2. If the system is now displaced through s small angle □ at its central axis, then an angular displacement ϕwill be produced at the supports



If both angles are small, then $\ell \phi = \left(\frac{d}{2}\right)\theta$

The restoring force at the point of attachment of the thread B and B_1 will be –

$$\frac{Mg}{2} \sin\phi = \frac{Mg}{2}\phi \text{ (for small } \phi \text{)}$$

Since $\phi = \left(\frac{d\theta}{2\ell}\right)$, the restoring force = $Mg\frac{d\theta}{4\ell}$, and the restoring couple is thus $-Mgd\frac{d\theta}{4\ell}$.

Giving an equation of motion $I\ddot{\theta} = \frac{-Mgd^2.\theta}{4\ell}$ i.e., $\ddot{\theta} + \frac{Mgd^2.\theta}{4I\ell} = 0$

Therefore, the motion is S.H.M. of periodic time, $T = 2\pi\sqrt{\frac{4I\ell}{Mgd^2}}$

Therefore, $I = \frac{mgd^2T^2}{16\pi^2\ell}$

Alternatively, T may be expressed as: $T = 2\pi.\frac{2K}{d}\sqrt{\frac{\ell}{g}}$, since $K^2 = \frac{I}{M}$

where d is the distance between the wires (m)
ℓ is the length of suspension (m)
K is the radius of gyration of the body about its centre of gravity.

Friction

Forces that resists the sliding or rolling of one solid object over another. Frictional forces, such as the traction needed to walk without slipping, may be beneficial, but they also present a great measure of opposition to motion. About 20 percent of the engine power of automobiles is consumed in overcoming frictional forces in the moving parts.

Laws of friction:

There are five laws of friction and they are:

- The friction of the moving object is proportional and perpendicular to the normal force.
- The friction experienced by the object is dependent on the nature of the surface it is in contact with.
- Friction is independent of the area of contact as long as there is an area of contact.

- ➢ Kinetic friction is independent of velocity.
- ➢ The coefficient of static friction is greater than the coefficient of kinetic friction.

Angle of friction, Resultant reaction and cone of friction:

For the maximum angle of static friction between granular materials, see Angle of repose.

For certain applications, it is more useful to define static friction in terms of the maximum angle before which one of the items will begin sliding. This is called the *angle of friction* or *friction angle*. It is defined as:

$$\tan \theta = \mu_s$$

where θ is the angle from horizontal and μ_s is the static coefficient of friction between the objects.[47] This formula can also be used to calculate μ_s from empirical measurements of the friction angle.



Let *ON* represent the normal reaction offered by a surface on a body (Fig.14.1). If *OX* is the direction in which the body tends to move then the force of friction acts in the opposite direction i.e, along *OE*. If the body be in limiting equilibrium the resultant *R* makes an angle λ with the normal *ON*.

Suppose the body is at the point of sliding in other direction, it is easily seen that the resultant reaction will make the same angle λ with the normal. Hence, when limiting friction is offered the line of action of the resultant reaction should always lie on the surface of an inverted right circular cone whose semi-vertex is λ. This cone is called the *cone of friction*.



Equlibrium of a body on a inclined plane:

For a body in equilibrium on a rough inclined surface that is acted on only by the weight of and the normal reaction force on the body, it is the case that$mg\theta=mg\mu\theta$,sin cos where θ is the angle the surface makes with the horizontal, μ is the coefficient of static friction between the body and the surface, m is the mass of the body, and g is acceleration due to gravity.

When an applied force acts on a body in equilibrium on a rough inclined plane, parallel to the plane, the magnitude of the friction must equal the sum of the net force on the body due to its weight and the normal reaction on it and the applied force.

A force that acts on a body in equilibrium on a rough inclined surface that does not act parallel to the surface changes the normal reaction force and frictional force on the body. Changing the normal reaction force necessitates that the perpendicular components of the applied force be equated with perpendicular components of the weight of the body, the normal reaction force on the body, and the frictional force on the body to determine any of these forces other than the weight of the body.

The magnitude of the resultant of the weight of a body on a rough inclined plane and the normal reaction on the body can be greater than the limiting friction between the body and the plane. If no external force acts on the body, the body cannot be in equilibrium.

An external force acting upward parallel to the plane can maintain the equilibrium of the body. There are two possible values for the magnitude of this force. These are given by$F=F+L$maxand$F=F-L$,minwhere F is the magnitude of the resultant of the weight of the body and the normal reaction force on it and L is the magnitude of the limiting friction.



FRICTION CLUTCH

A clutch is a mechanical device that engages and disengages the power transmission , especially from driving shaft to driven shaft. In the simplest application, clutches connect and disconnect two rotating shafts (drive shafts or line shafts). In these devices, one shaft is typically attached to an engine or other power unit (the driving member) while the other shaft (the driven member) provides output power for work.

MAIN PARTS OF A CLUTCH

It consists of (a) a driving member, (b) a driven member, and (c) an operating member. Driving member has a flywheel which is mounted on the engine crankshaft. A disc is bolted to flywheel which is known as pressure plate or driving disc. The driven member is a disc called clutch plate. This plate can slide freely to and fro on the clutch shaft. The operating member consists of a pedal or lever which can be pressed to disengaged the driving and driven plate.

TYPES OF CLUTCHES

1) Positive contact clutches i. jaw clutches ii.toothed clutches 2) Friction clutches i.Disc clutches ii.Cone clutches iii.centrifugal clutches

PRINCIPLE OF CLUTCH

It operates on the principle of friction. When two surfaces are brought in contact and are held against each other due to friction between them, they can be used to transmit power. If one is rotated, then other also rotates. One surface is connected to engine and other to the transmission system of automobile. Thus, clutch is nothing but a combination of two friction surfaces.

Mechanical clutches 1)Positive contact clutches i. jaw clutches ii.toothed clutches 2)Friction clutches i.Disc clutches ii.Cone clutches iii.centrifugal clutches.

System Components Flywheel: Transfers engine power to the clutch Input shaft: Transfers power from clutch to the transmission Clutch Disk (clutch): Splined to input shaft; transfers power from engine to the input shaft Pressure Plate Assembly: Spring pressure tightly holds the clutch to the flywheel



நிலைமத் திருப்புத்திறன் மற்றும் அதன் முக்கியத்துவம் :

நியூட்டனின் முதல் இயக்க விதியின் படி, புறக்காரணியான விசையொன்று செயல்படாத வரை பொருளொன்று தொடர்ந்து தனது ஓய்வு நிலையை அல்லது சீரான இயக்க நிலையை மாற்றிக் கொள்ள முடியாது. பொருள் தனது ஓய்வு நிலையை அல்லது சீரான இயக்க நிலையைத் தானே மாற்றிக்கொள்ள முடியாத தன்மை நிலைமம் எனப்படும். நிலைமம் என்பது பருப்பொருளின் அடிப்படையான பண்பாகும். ஒரு குறிப்பிட்ட விசைக்கு நிறை அதிகமாக இருப்பின், இயக்கத்திற்கான எதிர்ப்பு அதிகமாக இருக்கும். அல்லது நிலைமம் அதிகமாக இருக்கும். ஆகவே நேர்க்கோட்டியக்கத்தில் நிலைமத்தினை பொருளின் நிறை அளவிடுகிறது.

இது போன்றே, சுழல் இயக்கத்திலும், குறிப்பிட்ட அச்சை பொருத்து சுழலும் பொருளொன்று, அதன் நிலையில் ஏற்பட வேண்டிய மாற்றத்தை எதிர்க்கும். எதிர்ப்பின் அளவு, பொருளின் நிறையையும் சுழலும் அச்சைப் பொருத்த நிறையின் பரவலையும் சார்ந்தது. சுழல் இயக்கத்தில் நிலைமத்தை, அச்சைப் பற்றிய பொருளின் நிலைமத் திருப்புத்திறன் எனலாம்.

நேர்க்கோட்டியக்கத்தில் நிறை ஆற்றும் பங்கினைப் போன்று சுழல் இயக்கத்தில் நிலைமத் திருப்புத் திறன் பங்காற்றுகிறது. மேலும், சுழலும் நிலையில் மாற்றம் ஏற்படுத்தத் திருப்பு விசையைச் செயல்படுத்த வேண்டியுள்ளது.

சுழலும் பொருளின் இயக்க ஆற்றலும் திண்மப் பொருளின் நிலைமத் திருப்புத் திறனும் :

திண்மப் பொருளொன்று XOX' என்ற அச்சைப் பொருத்து ω கோண திசைவேகத்துடன் சுழல்வதாகக் கருதுக. சுழற்சியின் அச்சிலிருந்து $m_1, m_2, m_3 \ldots$ என்ற நிறைகளை உடைய துகள்கள் முறையே $r_1, r_2, r_3 \ldots$ என்ற தொலைவுகளில் இருப்பதாகக் கருதுக. அனைத்து துகள்களின் கோணத் திசைவேகம் சமம். ஆனால் துகள்கள் வெவ்வேறு நேர்க்கோட்டு திசைவேகங்களுடன் சுழல்கின்றன.

துகள்களின் நேர்க்கோட்டுத் திசை வேகங்கள் $v_1, v_2, v_3 \ldots$ என இருக்கட்டும்.

முதல் துகளின் இயக்க ஆற்றல் $= \frac{1}{2} m_1 v_1^2$

ஆனால் $v_1 = r_1 \omega$

முதல் துகளின் இயக்க ஆற்றல் $= \frac{1}{2} m_1 (r_1 \omega)^2$

$$= \frac{1}{2} m_1 r_1^2 \omega^2$$

அது போன்று, இரண்டாவது துகளின் இயக்க ஆற்றல்

$$= \frac{1}{2} m_2 r_2^2 \omega^2$$

மூன்றாவது துகளின் இயக்க ஆற்றல் $= \frac{1}{2} m_3 r_3^2 \omega^2$

சுழலும் திண்மப் பொருளின் இயக்க ஆற்றல், அனைத்து துகள்களின் இயக்க ஆற்றல்களின் கூடுதலுக்குச் சமம் ஆகும்.



சுழல் இயக்க ஆற்றலும் நிலைமத் திருப்புத் திறனும்

சுழல் இயக்க ஆற்றல்:

$$= \frac{1}{2} (m_1 r_1^2 \omega^2 + m_2 r_2^2 \omega^2 - m_3 r_3^2 \omega^2 + \ldots m_n r_n^2 \omega^2)$$

$$= \frac{1}{2} \omega^2 (m_1 r_1^2 + m_2 r_2^2 + m_3 r_3^2 + \ldots m_n r_n^2)$$

அதாவது $E_R = \frac{1}{2} \omega^2 \left[\sum_{i=1}^{n} m_i r_i^2 \right]$

நேர்க் கோட்டியக்கத்தில், இயக்க ஆற்றல் $= \frac{mv^2}{2}$

மேற்கண்ட சமன்பாட்டுடன் (1) - ஐ ஒப்பிட $\sum_{i=1}^{n} m_i r_i^2$ என்பது நிலைமப் பண்பினை வகிக்கிறது என அறியமுடிகிறது.

ஆகவே சுழலும் திண்ம பொருளின் சுழலும் அச்சைப் பொறுத்தே நிலைம திருப்பு திறனாகும்.

நிலைமத் திருப்பு திறன்.

$$I = \text{நிறை} \times (\text{தொலைவு})^2$$

சுழல் இயக்க ஆற்றல் $\frac{1}{2}\omega^2 I$

$\omega = 1\ rad s^{-1}$ என்ற போது சுழல் இயக்க ஆற்றல் $= E_R\ \frac{1}{2}(1)^2 I$

அல்லது $I = 2E_R$

1 ரேடியன் /வினாடி கோணத் திசைவேகத்துடன் சுழலும் பொருளின் இயக்க ஆற்றலின் இருமடங்கு நிலைமத் திருப்புத் திறனுக்குச் சமம் ஆகும். நிலைம திருப்புதிறனின் அலகு $kg m^2$ அதன் பரிமாண வாய்ப்பாடு ML^2

<u>சுழற்சியின் ஆரம்</u> :

சுழலும் திண்மப் பொருளின் நிலைமத் திருப்பு திறன்.

$$I = \sum_{i=1} m_1 r_1^2 = m_1 r_1^2 + m_2 r_2^2 + \ldots\ m_n r_n^2$$

திண்ம பொருளின் துகள்கள் அனைத்தும் சம நிறையைப் பெற்றிருப்பின். அதாவது $m_1 = m_2 = m_3 = \ldots\ m$ எனில்,
மேற்கண்ட சமன்பாடானது,

$$I = mr_1^2 + mr_2^2 + mr_3^2 + \ldots\ mr_n^2$$

$$= m(r_1^2 + r_2^2 + r_3^2 + \ldots\ r_n^2)$$

$$I = nm\left[\frac{r_1^2 + r_2^2 + r_3^2 + \ldots + r_n^2}{n}\right]$$

இதில் n என்பது திண்மப் பொருளில் உள்ள துகள்களின் எண்ணிக்கையாகும்.

$$\therefore I = MK^2$$

இதில் $M = nm$ = பொருளின் மொத்த நிறை மற்றும்

$$K^2 = \frac{r_1^2 + r_2^2 + r_3^2 + \ldots + r_n^2}{n}$$

$$K = \sqrt{\frac{r_1^2 + r_2^2 + r_3^2 + \ldots + r_n^2}{n}}$$

K என்பது சுழற்சியின் அச்சைப் பொறுத்த திண்மப் பொருளின் சுழற்சியின் ஆரம் ஆகும்

பொருளின் சுழற்சியின் அச்சிலிருந்து துகள்களின் இருமடி மூலச் சராசரி இருமடி தொலைவிற்கு சுழற்சியின் ஆரம் சமமாகும்.

பொருளின் ஒட்டுமொத்த எடையும் செறிந்துள்ள புள்ளிக்கும் சுழற்சி அச்சுக்கும் இடைப்பட்ட செங்குத்து தொலைவு எனவும் சுழற்சியின் ஆரத்தை வரையறுக்கலாம்.

சமன்பாடு (2) - லிருந்து $K^2 = \frac{I}{M}$ அல்லது $K = \sqrt{\frac{I}{M}}$

நிலைமத் திருப்புத் திறனின் தேற்றங்கள்

i) இணை அச்சுக்கள் தேற்றம் கூற்று



இணை அச்சுக்களின் தேற்றம்

பொருளின் எந்தவொரு அச்சைப் பற்றிய நிலைமத் திருப்புத்திறனானது, ஈர்ப்பின் மையம் வழியே செல்லும் இணை பற்றிய நிலைமத் திருப்புத் திறன் மற்றும் பொருளின் நிறையையும் இரு அச்சுகளுக்கு இடைப்பட்ட தொலைவின் இரு மடியையும் பெருக்கினால் வரும் பெருக்கற்பலன் ஆகியவற்றின் கூடுதலுக்கு சமமாகும்.

மெய்ப்பித்தல் :

படத்தில் காட்டியவாறு, ஈர்ப்பின் மையம் G ல் உள்ள பொருள் ஒன்றை கருதுவோம். XX' என்ற அச்சு ஈர்ப்பின் மையம்

வழியாகவும் பொருளின் தளத்திற்குச் செங்குத்தாகவும் செல்கிறது. X_1X_1' என்ற அச்சு, புள்ளி O வழியாகவும் XX' அச்சுக்கு இணையாகவும் செல்கிறது. இரு இணை அச்சுகளுக்கு இடைப்பட்ட தொலைவு x ஆகும்.

ஒவ்வொன்றும் m நிறையுள்ள நுண்ணமைத் துகள்களாக பொருளை பிரிக்கலாம். O விலிருந்து r தொலைவில் உள்ள P என்ற துகளின் X_1OX_1' அச்சைப் பற்றிய நிலைமத் திருப்பு திறன் mr^2 ஆகும்.

X_1X_1' அச்சைப் பற்றி மொத்த பொருளின் நிலைமத் திருப்பு திறன்,

$$I_O = \sum mr^2$$

புள்ளி P யிலிருந்து, நீட்டப்பட்ட OG க்கு PA என்ற செங்குத்து கோடு வரையவும் P, G ஐ இணைக்கவும்.

ΔOPA ல்

$$PO^2 = OA^2 + AP^2$$

$$r^2 = (x+h)^2 + AP^2$$

$$r^2 = x^2 + 2xh + h^2 + AP^2$$

ΔGPA ல்

$$GP^2 = GA^2 + AP^2$$

$$y^2 = h^2 + AP^2$$

சமன்பாடு (3) - ஐ (2) - ல் பிரதியிட

$$r^2 = x^2 + 2xh + y^2$$

சமன்பாடு (4) - ஐ (1) - ல் பிரதியிட,

$$I_O = \sum m(x^2 + 2xh + y^2)$$

$$= \sum mx^2 + \sum 2mxh + \sum my^2$$

$$= Mx^2 + My^2 + 2x \sum mh$$

பொருளின் ஈர்ப்பின் மையம் வழியே செல்லும் அச்சு பற்றிய நிலைமத் திருப்புதிறன், $My^2 = I_G$ ஆகும். ஈர்ப்பின் மையம் G - ஐப் பொறுத்து பொருள் சமநிலையில் இருப்பதால், ஈர்ப்பின் மையத்தைச் சார்ந்து அனைத்து துகள்களின் திருப்பு திறன்களின்

கூடுதல் சுழியாகும்.

$$\sum (mg)(h) = 0 \quad \text{அல்லது} \quad \sum mh = 0$$

$$I_O = Mx^2 + I_G$$

இவ்வாறு இணை அச்சுகள் தேற்றத்தை மெய்ப்பிக்கலாம்.

ii) செங்குத்து அச்சுகள் தேற்றம் கூற்று



செங்குத்து அச்சுகளின் தேற்றம்.

ஒன்றுக்கொன்று செங்குத்தான மூன்று அச்சுகள் பொதுவான புள்ளியில் வெட்டுமாறு இருக்க. சமதள மெல்லிய பரப்புடைய பொருளின் தளத்திற்குச் செங்குத்தான அச்சு பற்றிய நிலைமத் திருப்பு திறனானது, தளத்திலேயே அமைந்த ஒன்றுக்கொன்று செங்குத்தான இரு அச்சுக்களைப் பற்றிய நிலைமத் திறன்களின் கூடுதலுக்கு சமம்.

மெய்ப்பித்தல் :

படத்தில் காட்டியவாறு தளத்தில் அமைந்த OZ மற்றும் OY அச்சுக்களை உடைய சமதள மெல்லிய பரப்பினைக் கருதவும்.

OZ என்ற அச்சு, O வழியாகவும் தளத்திற்கு செங்குத்தாகவும் செல்கிறது. ஒவ்வொன்றும் m நிறையுடைய ஏராளமான துகள்களாக மெல்லிய பரப்பு பிரிக்கப்படுகிறது. O - விலிருந்து r தொலைவில் உள்ள P என்ற துகள் (x, y) கூறுகளை கொண்டுள்ளது.

$$\therefore r^2 = x^2 + y^2$$

OZ அச்சைப் பொருத்து துகள் P நிலைம திருப்பு திறன் $= mr^2$

OZ அச்சைப் பொறுத்து மொத்த பரப்பின் நிலைமத் திருப்பு திறன், $I_z = \sum m r^2$

OX அச்சைப் பொறுத்து மொத்தப் பரப்பின் நிலைமத் திருப்புத் திறன், $I_x = \sum m y^2$

இதே போன்று $I_y = \sum m x^2$

$$I_z = \sum m r^2 = \sum m (x^2 + y^2)$$

$$I_z = \sum m x^2 = \sum m y^2 = I_y + I_x$$

$$\therefore I_z = I_y + I_x$$

இவ்வாறு செங்குத்து அச்சுகளின் தேற்றத்தை மெய்ப்பிக்கலாம்.

திண்ம பொருளின் கோண உந்தம்:

சுழற்சியின் அச்சிலிருந்து $r_1, r_2, \dots r_n$ தொலைவுகளில் உள்ள $m_1, m_2 \dots m_n$ நிறைகள் உடைய துகள்களின் தொகுதியை கருதுவோம். $v_1, v_2 \dots v_n$ என்பன துகள்களின் நேர்க்கோட்டுத் திசைவேகங்களாகும்.

திண்மப் பொருளின் கோண உந்தம்.

முதல் துகளின் நேர்க்கோட்டு உந்தம் $= m_1 v_1$

$v_1 = r_1 \omega$ எனில்

முதல் துகளின் நேர்க்கோட்டு உந்தம் $= m_1 (r_1 \omega)$

முதல் துகளின் நேர்க்கோட்டு உந்தத்தின் திருப்புத்திறன்

= நேர்க்கோட்டு உந்தம் × செங்குத்து தொலைவு

$= (m_1 r_1 \omega) \times r_1$

முதல் துகளின் கோண உந்தம் $= m_1 r_1^2 \omega$

இது போன்று இரண்டாவது துகளின் கோண உந்தம் $= m_2 r_2^2 \omega$

மூன்றாவது துகளின் கோண உந்தம் $= m_3 r_3^2 \omega$

திண்மப் பொருளின் கோண உந்தம் என்பது சுழற்சியின் அச்சை பொருத்து, சுழலும் திண்மப் பொருளின் அனைத்து துகள்களின் நேர்க்கோட்டு உந்தங்களின் திருப்பு திறன்களின் கூடுதல் ஆகும்.

∴ சுழலும் திண்மப் பொருளின் கோண உந்தம் = அனைத்து துகள்களின் கோண உந்தங்களின் கூடுதல்.

அதாவது,

$$L = m_1 r_1^2 \omega + m_2 r_2^2 \omega + m_3 r_3^2 \omega \ldots m_n r_n^2 \omega$$

$$L = \omega \left[m_1 r_1^2 + m_2 r_2^2 + m_3 r_3^2 + \cdots m_n r_n^2 \right]$$

$$= \omega \left[\sum_{i=1}^{n} m_i r_i^2 \right]$$

$$\therefore L = \omega I$$

இதில் $I = \sum_{i=1}^{n} m_i r_i^2$ என்பது சுழற்சியின் அச்சை பொருத்து சுழலும் திண்மப் பொருளின் நிலைமத் திருப்புத் திறன் ஆகும்.

கூட்டு ஊசலைப் பயன்படுத்தி g காணல் (சட்ட ஊசல்)

சட்ட ஊசல் கூட்டு ஊசலின் எளிய அமைப்பாகும். இது உலோகத்தாலான சட்டமாகும். (AB) இச்சட்டத்தின் நீளவாக்கில் சம தொலைவில் பல துளைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு கத்தி முனையை பயன்படுத்தி, எத்துளையிலும் தொங்கவிட்டு செங்குத்துத் தளத்தில் அலைவுறச் செய்யலாம்.

முதலில் இவ்வூசலின் புவி ஈர்ப்பு மையம் 'G' காண வேண்டும். ஊசலை ஒரு முனையில் உள்ள துளையில் தொங்க விட வேண்டும். புவி ஈர்ப்பு மையம் 'G' க்கும் தொங்கு தளத்திற்கும் இடையே உள்ள தூரம், ஊசலின் நீளமாகும். இப்போது ஊசலை அலைவுறச் செய்து அலைவு நேரம் காண வேண்டும். இதே போன்று G-க்கு மேலுள்ள ஒவ்வொரு துளையிலும் தொங்கவிட்டு அலைவு நேரம் காண வேண்டும். இதே போன்று G-க்கு மறுபக்கம் உள்ள துளைகளிலும் தொங்கவிட்டு அலைவு நேரம் காண வேண்டும்.

நீளத்திற்கும், அலைவு நேரத்திற்கும் வரைபடம் வரையலாம். வரைபடம் படத்தில் காட்டியவாறு அமையும்.



தொலைவு G ஐ நெருங்கும் போது முதலில் அலைவு நேரம் குறைந்து சிறும மதிப்பை அடைந்து, பின்பு அதிகரிக்கிறது. அலைவு நேரம் புவி ஈர்ப்பு மையத்தில் ஈறிலியாகும்.

X அச்சிற்கு இணையாக JN எனும் கிடைமட்டக்கோடு வரைவதாக கொள்வோம். இக்கோடு வளைகோட்டினை J, K, M, N. எனும் புள்ளிகளில் வெட்டுகிறது. இப்புள்ளிகளில் அலைவு நேரம் ஒரே சமமாகும்.

வரைபடத்தில் $JM = KN = L$. இது இணைமாற்று தனி ஊசலின் நீளத்திற்கு சமமாகும். வரைபடத்தில் $JR = l$, $RM = K^2/l$

$$JM = JR + RM = l + \frac{K^2}{l} = L$$

வரைபடத்திலிருந்து, இப்புள்ளிகட்கான அலைவு நேரம் காணலாம். $T = 2\pi\sqrt{\frac{L}{g}}$

$$g = \frac{4\pi^2 L}{l^2}$$

இதிலிருந்து g ன் மதிப்பு கணக்கிடலாம்.

தொடுகோடு OP வளைகோட்டில், அலைவு நேரம் சிறுமமாக உள்ள புள்ளிகளைத் தொடுகிறது. $K^2/l = l$ ஆக இருக்கும் போது அலைவு நேரம் சிறுமமாகும்.

$K^2 = l^2$ or $K = l$ ஆகவே CO, CP ஆகிய இரு தூரங்களும் K க்கு

சமமாக இருக்கும் OP = 2K இலிருந்து பெறப்படும் அலைவு நேரம் கணக்கிடலாம். இதிலிருந்து g கணக்கிடலாம்.

ஈரிழை ஊசல்



AB என்ற திண்மகோல் இரு சமநீளம் கொண்ட இணையற்ற நூல்கள் CA, DB ஆல் கட்டி தொங்கவிடப்பட்டுள்ளது. படத்தில் A, B என்ற புள்ளிகள் புவி ஈர்ப்பு மையம் G லிருந்து சம தொலைவில் உள்ளது. $AB = 2a$ எனவும், $CD = 2b$ எனவும் கொள்வோம். AB சிறிது இடப்பெயர்ச்சி அடையச் செய்து, அலைவுறச் செய்யலாம். அதாவது ஒரு நேரம் t-ல் AB-ன் நிலை A_1B_1 எனக் கொள்வோம்.

இப்போது கோண இடப்பெயர்ச்சி $\angle AGA_1 = \theta$ எனக் கொள்வோம். இது மிகக் குறைவாகும்.

$\therefore AG = A_1G, \ \angle GAA_1 = \angle GA_1A = 90$ ..

θ மிக குறைவாக இருப்பதால் AEA_1 ஐ ஒரு முக்கோணமாகக் கொள்ளலாம்.

$$A_1E' = AE^2 + AA_1^2 - 2AE \times AA_1 \cos\left(90 - \frac{\theta}{2}\right)$$

$$= AE^2 + a^2\theta^2 - 2\,AB\,a\theta\frac{\theta}{2}$$

$$= AE^2 + a^2\theta^2 - AEa\theta^2$$

θ மிகக் குறைவாக இருப்பதால் θ^2 புறக்கணிக்கத்தக்கது.

$A_1E^2 = AE^2$ or $A_1E = AE$

ஆகவே $\angle A_1CE$ ϕ க்குச் சமமாகும்.

$AC = BD = l$ எனின் $\sin \phi = \frac{a-b}{l}$; $\cos \phi = \frac{\sqrt{l^2-(a-b)^2}}{l}$

A_1C, B_1D இழைகளின் இழுவிசை, செங்குத்துடன் சமகோணம் ϕ சாய்ந்துள்ளது.

$2T \cos \phi = mg$.

மீட்சி கட்டையின் திருப்புத்திறன் $= T \sin \phi \times 2\,GH$

இங்கு H, A_1E நேர்கோட்டிற்கும் $T \sin \theta$ கூறும், G லிருந்து வரையப்படும் செங்குத்து கோட்டின் அடியாகும்.

$\angle GA_1E = \alpha$ என்றால் ΔGH_1H ல்

$$\frac{b}{\sin \alpha} = \frac{a-b}{\sin \theta} \quad (\text{or}) \quad \sin \alpha = \frac{b \sin \theta}{(a-b)}$$

செங்கோண முக்கோணம் GHH_1 ல்

$$GH = a \sin \alpha$$

$$GH = \frac{ab}{a-b} \sin \theta$$

சமன்பாடு (3) லிருந்து GH ன் மதிப்பை சமன்பாடு (2) ல் பதிலீடு செய்ய

மீட்சி கட்டை திருப்புத்திறன்

$$= T \sin \phi \times \frac{2ab}{a-b} \sin \theta$$

$$T = \frac{mg}{2 \cos \phi}$$

மீட்சி கட்டைத் திருப்புத்திறன்

$$= \frac{mg}{2\cos \phi} \sin \phi \, \frac{2ab}{(a-b)} \sin \phi$$

மீட்சி கட்டை திருப்புத்திறன் $= \frac{mg}{2} \frac{1}{\sqrt{l^2-(a-b)}} \frac{a-b}{l} \frac{2ab}{(a-b)} \sin \theta$

$$\frac{mg\,ab}{\sqrt{l^2-(a-b)}} \sin \theta$$

மீட்சி கட்டையின் திருப்புத்திறன் $= \frac{mg\,ab}{\sqrt{l^2-(a-b)}}\, \theta$.

பொருளின் கோண முடுக்கம் $d^2\theta / dt^2$ எனவும் பொருளின் புவி ஈர்ப்பு மையம் வழியாக செல்லும் அச்சை பற்றிய நிலைத் திருப்புதிறன் I எனவும் கொண்டால்.

விலக்கு இரட்டை $= I \frac{d^2\theta}{dt^2}$

$$I \frac{d^2\theta}{dt} = - \frac{mgab}{\sqrt{l^2-(a-b)}}\theta$$

$$\frac{d^2\theta}{dt^2} = - \frac{mgab}{I\sqrt{l^2-(a-b)}}\theta$$

$\frac{mgab}{I\sqrt{l^2-(a-b)}}$ ஒரு மாறிலி.

$$\frac{d^2\theta}{dt^2} \propto \theta$$

பொருளின் முடுக்கமானது, கோண இடப்பெயர்ச்சிக்கு நேர்விகிதத்தில் உள்ளது. ஆகவே இவ்வியக்கம் சீரிசை இயக்கமாகும்.

அலைவு நேரம் $T = \frac{2\pi}{\sqrt{\text{மாறிலி}}}$

$$T = 2\pi \frac{I\sqrt{l^2(a-b)}}{mgab}$$

$$\text{மாறிலி} = \frac{mgab}{I\sqrt{l^2-(a-b)}}$$

a,b ஏறத்தாழ சமமாக இருப்பதால் (a-b) புறக்கணிக்கத்தக்கது.

$T = 2\pi \frac{Il}{mgab}$ நூல்கள் இணையாக இருந்தால் $a=b$

$$T = 2\pi \frac{Il}{mga^2}$$

ஆகவே அலைவு நேரம் நிலைமத்திருப்பு திறனும் தெரிந்தால் θ கணக்கிடலாம்.

UNIT - III

உராய்வு [Friction]

▶ இரு பொருட்கள் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருக்கும் போது, அவைகளுக்கிடையே ஒரு விசை செயல்படுகிறது. இவ்விசையானது ஒரு பொருள் மற்றதன் மேல் நகர்வதற்குத் தடையாக அமைகிறது. இத்தகைய விசையை உராய்வு விசை என்பர். உராய்வு நமது அன்றாட வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கிறது.

▶ உராய்வு விசை இல்லாவிடில் நம்மால் எந்த வேலையும் செய்ய முடியாது.

நிலையியல், இயக்கவியல், வரம்பு உராய்வு :-

▶ ஒரு பொருள் மற்றதன் மேல் சமநிலையில் இருக்கும் போது தோன்றுகின்ற உராய்வு விசையானது அப்பொருளை சமநிலையில் அமைப்பதற்கு தேவையான அளவாகிறது.

▶ ஒரு பொருள் மற்றொன்றின் மேல் நகருகின்ற நிலையில் இருக்கும் போது தோன்றுகின்ற உராய்வு பெரும் மதிப்பை அடைகிறது.

▶ ஒரு பொருளானது மற்றதன் மேல நகரும்போது தோன்றுகின்ற உராய்வினை "இயக்கவியல்" உராய்வு என்பர்.

உராய்வு விதிகள் [Laws of friction]

▶ இரு பொருட்கள் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருக்கும் போது இரண்டிற்குமிடையே தோன்றுகின்ற உராய்வு விசையின் செயல்படு திசையானது பொருள் எந்த திசையில் நகர முயலுகிறதோ எதிர்த்திசையில் அமையும்.

- ஒரு பொருள் மற்றொன்றின் மேல் ஒன்று சமநிலையில் இருக்கும் போது தோன்றுகின்ற உராய்வு விசையின் அளவினை நழுவிடாமல் தடுக்கும் அளவான இருக்கும்.
- வரம்பு உராய்வு விசைக்கும் செங்குத்து எதிர்விசைக்கும் உள்ள விகிதம் ஒரு மாறிலியாகும்.
இதனை μ எனும் எழுத்தால் குறிப்பர். μ - ன் மதிப்பு பொருளின் தன்மையைச் சார்ந்தது.
- செங்குத்து எதிர்விசை மாறாமல் இருக்கும் போது வரம்பு உராய்வு விசை பொருளின் அளவு, உருவம் ஆகியவற்றைப் பொறுத்திருப்பதில்லை.
- இயக்கவியல் உராய்வு விதி :- ஒரு பொருள் மற்றதன் மேல் நகரும் போது இரு பொருள்களுக்கிடையே உராய்வு விசை தோன்றி இயக்கத்தை எதிர்க்கிறது.

<u>உராய்வு கூம்பும்</u> , <u>உராய்வு கோணமும்</u> ;

- ஒரு பொருளானது மற்றொரு பொருளின் மீது நகரும் நிலையில் இருப்பதாகக் கொள்வோம்.
- வரம்பு உராய்வு விசை F(2) செங்குத்து எதிர்விசை R. இவ்விரு விசைகளை ஒரு ஒற்றை விசையால் குறிக்கலாம். இந்த விசை S ஆகும்.



$$\tan \lambda = \frac{F}{R}$$

ஆனால் $\frac{F}{R} = \mu$

$$\tan \lambda = \mu .$$

$$S^2 = F^2 + R^2$$

$$S = \sqrt{F^2 + R^2}$$

▶ உராய்வு விசையின் பெரும மதிப்பு $F = \mu R$ எனும்போது எதிர்விசை நேர்குத்து விசையுடன் அமைக்கும் கோணம்

$$\lambda = \tan^{-1}\mu$$

சொரசொரப்பான சாய்தளம் ஒன்றில் மேலும், கீழும் நோக்கிய இயக்கம்

a. சமநிலையில் உள்ள பொருள் :-

W எடை கொண்ட பொருள் ஒன்று, சாய்தளம் ஒன்றில் வைக்கப் பட்டிருப்பதாகக் கொள்வோம்.

▶ பொருளின் எடை W செங்குத்தாகக் கீழ் நோக்கிச் செயல்படுகிறது.

▶ உராய்வு விசை சாய்தளம் வழியாக மேல்நோக்கிச் செயல்படுகிறது.

▶ நேர்குத்து விசை R தளத்திற்குச் செங்குத்தாகச் செயல்படுகிறது.

$$F = W \sin\theta \qquad \text{——— (1)}$$

$$R = W \cos\theta \qquad \text{——— (2)}$$

$$F/R = \tan\theta \qquad \text{——— (3)}$$



$F/R = \tan\lambda = \mu$

தளத்திற்கு இணையான விசை செயல்படும்போது பொருளின் சமநிலை

▶ ஒரு பொருளானது ஒரு சாய்தளத்தில் இருப்பதாகக் கொள்வோம்.

▶ சாய்தளம் கிடைமட்டத்துடன் ஏற்படுத்தும் கோணம் α எனவும் பொருளின் எடை W எனவும் செங்குத்து எதிர் விசை R.



▶ வரம்பு உராய்வு விசை $= \mu R$ பொருளை சமநிலையில் இருக்கச் செய்வதற்குத் தேவையான விசை P எனக் கொள்வோம்.

பொருளின் மீது செயல்படும் விசைகள் ;

▶ பொருளின் எடை கீழ்நோக்கிச் செயல்படுகிறது

▶ செங்குத்து எதிர்விசை R தளத்திற்குச் செங்குத்து திசையில் செயல்படுகிறது.

$$P + \mu R = W\sin\alpha \qquad \text{---}(1)$$

$$R = W\cos\alpha \qquad \text{---}(2)$$

$$P = W\sin\alpha - \mu W\cos\alpha \qquad \text{---}(3)$$

$$P = \frac{W\sin(\alpha-\lambda)}{\cos\lambda} \qquad \text{----}(4)$$

$$P_1 = \frac{W\sin(\alpha-\lambda}{\cos\lambda}$$



▶ பொருளானது மேல் நோக்கி நகரும் நிலையில் இருப்பதாகக் கருதுவோம்.

▶ வரம்பு உராய்வு விசை கீழ்நோக்கிச் செயல்படும். பொருளை சமநிலையில் இருப்பதற்குப் பயன்படுத்த வேண்டிய விசை P ஆகும்.

$$P - \mu R = W \sin\alpha$$

$$R = W \cos\alpha$$

$$= \frac{W(\sin\alpha \cdot \cos\lambda + \sin\lambda \cos\alpha)}{\cos\lambda}$$

$$P_2 = \frac{W \sin(\alpha+\lambda)}{\cos\lambda} \qquad \text{—— (10)}$$

$P > P_2$ எனில் பொருள் மேல் நோக்கி நகரும். சமநிலைக்கும் P-க்கும் மதிப்பானது

$$\frac{W\sin(\alpha-\lambda)}{\cos\lambda} \text{ க்கும் } \frac{W\sin(\alpha+\lambda)}{\cos\lambda} \text{ க்கும்.}$$

இடைப்பட்டதாக இருக்கும்.

C. சாய்வான ஒரு தளத்தில் செயல்படும் பொருளின் சமநிலை

▶ ஒரு பொருளானது சாய்தளத்தில் இருப்பதாகக் கொள்வோம். சாய்தளமானது கிடைமட்டத்துடன் அமைக்கும் கோணம் α எனக் கொள்வோம்.

▶ கயிற்றின் மீது ஒரு விசை செயல்படுகிறது. θ கோணம் சரிகிறது.





▶ பொருள் கீழ்நோக்கி நகரும் நிலையில் இருப்பதாகக் கருதுவோம். உராய்வு μR மேல் நோக்கி செயல்படும்.

$$P\cos\theta + \mu R = W\sin\alpha \quad \text{———} \quad (1)$$

$$P\sin\theta + R = W\cos\alpha. \quad \text{———} \quad (2)$$

$$P = \frac{W\sin(\alpha-\lambda)}{\cos(\theta+\lambda)} \quad \text{———} \quad (3)$$

$$P_1 = \frac{W\sin(\alpha-\lambda)}{\cos(\theta+\lambda)} \quad \text{———} \quad (4)$$

$$P\cos\theta - \mu R = W\sin\alpha \quad \text{———} \quad (5)$$

$$P\sin\theta + R = W\cos\alpha \quad \text{———} \quad (6)$$

சிறப்பு நிலை

$$P_2 = \frac{W\sin(\alpha+\lambda)}{\cos(\theta-\lambda)}$$

$$\frac{W\sin(\alpha+\lambda}{\cos(\theta-\lambda)} \quad \text{———} \quad (8)$$

உராய்வு கிளட்ச்;

- கிளட்ச் என்பது ஒரே அச்சில் இணைக்கப்பட்ட இரு தண்டுகளில் ஒரு தண்டின் சுழற்சி இயக்கத்தை மற்றொரு தண்டிற்கு மாற்றும் அமைப்பாகும்.
- சீரான ஏற்றம் என்னும் ஒரு விதமான கிளட்சில் ஒரு தண்டு மிக விரைவாகவும், மற்றொரு தண்டு நிலையாக குறைந்த வேகத்தினை இயக்கும் கிளட்ச் இயங்கும் போது விரைவாக இயங்கும் வேகம் அதிகரிக்கவும் செய்யும்.
- இவ்வகையான கிளட்ச் "உராய்வு கிளட்ச்" எனப்படும்.



உராய்வு கிளட்ச்சின் செயல்பாட்டினை புரிந்து கொண்டு C மற்றும் D என்ற இரு தண்டினை கருதுவோம். அவைகள் A மற்றும் B என்ற பேரிங்குகள் மீது பொருத்தப்பட்டுள்ளது. PQ என்ற போது அச்சைப் பொறுத்து சுழல்கின்றன.

E மற்றும் என்ற இரு வட்டு தட்டுகள் C மற்றும் D ன் முனைகளில் ஒன்றையொன்று நேர்கோட்டில் இணைக்கப் பட்டுள்ளன.

வட்டு தட்டு E உடைய தண்டு 'C' மிக விரைவாக இயங்குவதாகவும் வட்டு தட்டு F உடைய தண்டு D நிலையானதாகவும் கொள்வோம்.

இரு தண்டுகளும் அழுத்தப்படும்போது அவற்றின் இணைக்கப்பட்டுள்ள வட்டு தட்டுகள் ஒன்றுடன் ஒன்று தொடுகின்றன.

வட்டுதட்டு E ன் வேகத்தை குறைக்கும்.

Books for study andreference

1. Dynamics – M. Narayanamurthi,N. Nagarathnam, The National Publishing Co. 2002
2. Statics, Hydrostatics and Hydrodynamics - M. Narayanamurthi,N. Nagarathnam, The National Publishing Co. 1990
3. Enthiravyil- Sundravelusamy, Priya Publicationns 2002